# 4

# சுவனம் – நரகம்




மனிதர்கள் இவ்வுலகில் பல்வேறு விதமாக வாழ்ந்துவிட்டுச் செல்கின்றார்கள். ஒரு சாரார் நற்பண்புகளை அணிகலனாகக் கொண்டவர்கள். அவர்கள் ஈமான், சத்தியம், உண்மை, நேர்மை, தயாளம், தியாகம் போன்ற நற்குணங்களோடு வாழும் நல்லவர்கள். மற்றொரு சாரார் குப்ர், பொய், அசத்தியம், கொலை, கொள்ளை, துரோகம், வாக்கு மீறுதல், ஏமாற்றுதல், மோசடி செய்தல் போன்ற கொடிய பாவங்களைப் புரியும் தீயவர்கள்.

நல்லவர்கள் - தீயவர்கள் இரு சாராருக்கும் மரணம்தான் வாழ்வின் முற்றுப்புள்ளி என அமைவது நியாயமானதா? அது வாழ்க்கைக்கான அர்த்தத்தைப் புலப்படுத்துமா? அப்படியாயின் இவ்வுலகில் நன்மை செய்து வாழ்ந்தவர்களுக்குரிய வெகுமதிதான் என்ன? பாவ காரியங்கள் செய்து பிறருக்கு துன்பம் இழைத்து வாழ்ந்தவர்களுக்குத் தண்டனைகள் இல்லையா? தண்டனை வழங்குவதாயினும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நியாயமான முறையில் வழங்க முடியுமா? ஒரு கொலை செய்தவனுக்கும் பல கொலைகள் செய்தவனுக்கும் உலகில் கொடுக்க முடியுமான உயர்ந்தபட்சத் தண்டனை மரண தண்டனையாகும். இது நியாயமானதா? இல்லவே இல்லை. அப்படியாயின் நல்லவர்களுக்கும் தீயவர்களுக்கும் அவரவரது செயற்பாடுகளுக்கு ஏற்ப கூலி வழங்க வேண்டும் என்பது நியாயம் அல்லவா? இவ்வாறு கூலி வழங்கும் நாளையே முஃமின்களாகிய நாம் மறுமைநாள் என விசுவாசிக்கின்றோம்.

*மறுமை நாளில் பல நிகழ்வுகள் இடம்பெறுகின்றன. அதனை நாம் முந்திய பாடத்தில் கற்றோம். மறுமை நாளில் இறுதியாக இடம்பெறும் நிகழ்வே நல்லவர்கள் சுவனத்தில் நுழைவதும் பாவிகள் நரகில் வீழ்வதுமாகும். இனி நாம் சுவனம், நரகம் பற்றி சுருக்கமாக நோக்குவோம்.*

## சுவனம்

*சுவனத்திற்கு ஜன்னதுல் பிர்தவ்ஸ், ஜன்னதுல் மஃவா, ஜன்னதுல் அத்ன், தாருல் ஹுலூத், தாருஸ் ஸலாம், தாருல் முகாமா, ஜன்னதுன் நஈம் எனப் பல பெயர்கள் உண்டு.*

*சுவனம் மிகவும் உன்னதமான இடமாகும். சுவனத்தில் பல தரங்கள் உண்டு. அதில் மிக உயர்ந்தது பிர்தவ்ஸ் என்பதாகும். இதில் நபிமார்கள், ஸித்தீக்கீன்கள் மற்றும் ஷுஹதாக்கள் போன்ற உத்தமர்கள் இருப்பர். மாட மாளிகைகளில் சுவனவாசிகள் இருப்பர். அவர்கள் விதவிதமான பழங்களையும் பறவைகளின் மாமிசங்களையும் புசித்துக் கொண்டிருப்பர். அந்த மாளிகைகளின் கீழால் பால், தேன், மது என்பவற்றால் வெவ்வேறாக உருவான நதிகள் சலசல என ஓடிக்கொண்டிருக்கும். கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் இந்த ரம்மியமான காட்சியை சித்தரிப்பதைப் பாருங்கள்.*

**''(நபியே) எவர்கள் (இவ்வேதத்தை) நம்பிக்கை கொண்டு (அதில் கூறப்பட்டுள்ளபடி) நற்செயல்களைச் செய்கின்றார்களோ அவர்களுக்கு (சுவனத்தில்) நிச்சயமாக சோலைகள் உண்டு என நீங்கள் நற்செய்தி கூறுங்கள். அவற்றில் நீரருவிகள் (தொடர்ந்து) ஓடிக்கொண்டேயிருக்கும். அவற்றிலிருந்து (அவர்களுக்கு) ஒரு கனி புசிக்கக் கொடுக்கப்படும் போதெல்லாம் முன்னர் நமக்கு கொடுக்கப்பட்டதும் இதுதானே! என (ஆச்சரியப்பட்டு)க் கூறுவார்கள். (ஏனென்றால்) பார்வைக்கு ஒரே விதமாகத் தோன்றக் கூடியவைகளையே கொடுக்கப் பெறுவார்கள். (எனினும் அவை சுவையில் விதவிதமாக இருக்கும்) பரிசுத்தமான மனைவிகளும் அங்கு அவர்களுக்குக் கிடைப்பார்கள். அன்றி அவர்கள் அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள்.''** (2: 25)

*சுவனவாசிகளின் ஆடை, அலங்காரம் பற்றிப் பின்வரும் அல்குர்ஆன் வசனம் விளக்குகிறது.* **''சுவனத்தில் தங்கி இருக்கும் அவர்களுக்கு தங்கத்தினாலும் முத்துக்களாலும் ஆன ஆபரணங்கள் அணிவிக்கப்படும். அங்கே அவர்கள் பட்டினால் ஆன ஆடை அணிந்திருப்பார்கள்.''** (22: 23)

*நல்லடியார்களும் நல்வழியில் வாழ்ந்த அவர்களது துணைவியர், பிள்ளைகளும் சுவனத்தின் நந்தவன நிழல்களில் சாய்மானங்களில் ஒய்யாரமாக அமர்ந்து குதூகலிப்பர். சுவனத்தில் எங்கும் எந்தவொரு தீய வார்த்தையோ, பாவமான பேச்சோ கேட்பதற்கு இருக்காது. சுவனவாசிகளின் அனைவரது உள்ளங்களிலிருந்தும் குரோதம் நீக்கப்பட்டிருக்கும். இதனால் அனைவரும் முகமலர்ச்சியுடன் பரஸ்பரம் ஸலாம் கூறி ஒருவரையொருவர் நேசத்துடன் ஆரத்தழுவி வரவேற்பார்கள். சுவனத்தில் முத்துக்கள், மரகதங்கள், பவளங்கள் பளிச்சென மின்னும். அங்கு சுவர்க்கவாசிகளுக்குக் கிடைக்கும் மிகப் பெரிய இன்பம் பூரண நிலவைப் போன்று அல்லாஹ்வைத் தங்களது கண்களால் காண்பதாகும்.*

# நரகம்

*நரகத்திற்கு நார், ஸஈர், ஜஹீம், ஜஹன்னம், லழா, ஹாவியா, ஸகர், ஹுதமா, வைல் எனப் பல பெயர்கள் உண்டு. நரகம் பாரிய தீக்கிடங்காகும். அது பற்றிக் கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் விளக்குகிறது.*

''விசுவாசிகளே நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் நரக நெருப்பைவிட்டும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அதன் எரிபொருட்கள் மனிதர்களும் கற்களுமாகும். அதில் கடின சித்தமுடைய பலசாலிகளான மலக்குகள் உள்ளனர். அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு அவர்கள் மாறுசெய்யமாட்டார்கள். அவன் ஏவியவற்றை அவர்கள் நிறைவேற்றுவார்கள்.'' (66: 6)

''அவர்கள் (தண்ணீர் கேட்டு) அபயமிட்டால் காய்ந்து உருகிய செம்பைப் போலுள்ள நீரே அவர்களுக்குக் கொடுக்கப்படும். (அவர் அதனைக் குடிப்பதற்கு முன்னதாகவே) அது அவர்களுடைய முகத்தைச் சுட்டுக் கருக்கிவிடும்.'' (18: 29)

''கொதிக்கும் நீருடன் அவர்களின் உடல்கள் நெருப்பால் சுடப்பட்டதால் வழியும் சீழையும் சேர்த்தே நரகவாசிகள் அருந்துவார்கள்.'' (78: 24-25)

*அல்லாஹ்வை நிராகரிக்கும் காபிர்களுக்கு நெருப்பினாலான ஆடைகள் முன்னரே தயார்படுத்தி வைக்கப்பட்டிருக்கும். நரகிற்குச் சென்றதும் அவை அவர்களுக்கு பலவந்தமாக அணிவிக்கப்படும். அவர்களின் தலைகளின் மேலால் தகதகவெனக் கொதிக்கும் நீர் ஊற்றப்படும். அதனால் அவர்களது தோல்களும் வயிற்றுக் குடல்களும் உருகி வெடிக்கும். பலமான இரும்புச் சம்மட்டிகளால் அடிக்கப்படும்போது அவர்கள், வேதனை தாங்க முடியாமல் நரகக் கிடங்கிலிருந்து வெளியேறிச் செல்ல முயற்சிப்பார்கள். ஆனால் அவர்கள் மீண்டும் அந்தக் கிடங்கிலேயே தள்ளப்படுவார்கள். 'உங்களுக்கான சுட்டெரிக்கும் வேதனையை இன்னுமின்னும் அனுபவியுங்கள்' என்று அவர்களுக்கு நரகக் காவலர்களால் கூறப்படும்.*

*நரகவாசிகளுக்கு மரணமே கிடையாது. அவர்களுக்கு எப்பொழுதும் நிம்மதி இருக்காது. அவர்களுக்கு 'ஸக்கூம்' எனும் உணவு திணிக்கப்படும். அது கசப்பான துர்வாடை வீசும் ஒருவகைத் தாவரமாகும். நரகவாசிகளின் தோல்கள் நெருப்பினால் எரிந்துவிட, மீண்டும் மீண்டும் புதிய தோல்கள் அவர்களுக்கு மாற்றப்படும்.*

*பாவங்களின் தராதரத்திற்கு ஏற்ப நரகில் தண்டனைகளின் அளவும் வேறுபடும். காபிர்கள் நரகில் நிரந்தரமாக இருப்பர். முஃமின்களில் பெரும் பாவம் செய்தோர் பாவத்தின் அளவுக்கேற்ப தண்டிக்கப்படுவர். பின்னர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஷபாஅத்தினால் அவர்கள் நரக விடுதலை பெறுவர்.*

எனவே நாம்

- ★ **அல்லாஹ்வை ஈமான் கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காட்டித்தந்த வாழ்க்கை முறையைப் பின்பற்றுவோம்.**
- ★ **நல்ல மனிதர்களாக வாழ்ந்து சமூகத்துக்கும் நாட்டுக்கும் சேவை செய்து ஜன்னத்துல் பிர்தவ்ஸ் எனும் சுவனத்தை அடைய முயற்சிப்போம்.**
- ★ **நரகிற்கு இட்டுச் செல்லும் பாவ காரியங்களிலிருந்து விலகி நடந்து அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்.**

### பயிற்சி

சுருக்கமான விடை தருக.

1. சுவனத்திற்குரிய பெயர்கள் நான்கைக் குறிப்பிடுக.
2. மிகவும் உயர்ந்த சுவர்க்கம் எது?
3. நரகத்திற்குரிய பெயர்கள் நான்கைக் குறிப்பிடுக.
4. நரகவாசிகள் சாப்பிடும் உணவின் பெயர் யாது?
5. நரகவாசிகளின் குடிபானமாக எவை இருக்கும்?
6. சுவனம் செல்வதற்குத் தடையாக அமையும் சமூகவிரோத செயற்பாடுகள் ஐந்தை அட்டவணைப்படுத்துக.

### செயற்பாடு

சுவன இன்பத்தை எடுத்துக்காட்டும் ஐந்து அல்குர்ஆன் வசனங்களையும் அவற்றின் பொருளையும் தேடி எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.